श्री:

# திருப்பல்லாண்டு

## பெரியாழ்வார் அருளிச்செய்தது

## தனியன்கள்

*ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச் செய்தது*
கு$^3$ருமுக$^2$ம் அநதீ$^4$த்ய ப்ராஹ வேதா$^3$ன ஷேஷாந்
நரபதி பரிக்லுப்தம் ஷுல்க மாதா$^3$து காம: |
ஷ்வஷுர மமர வந்த்$^3$யம் ரங்க$^3$நாத$^2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$^3$விஜ குல திலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ||

*பாண்டிய பட்டர் அருளிச் செய்தது*
மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்று ஒருகால்*
சொன்னார் கழற்கமலம் சூடினோம்*
முன்னாள் கிழியறுத்தான் என்றுரைத்தோம் கீழ்மையினிற்சேரும்*
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று*
ஈண்டிய சங்கம் எடுத்தூத*
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்*
பாதங்கள் யாமுடைய பற்று.

### பாசுரங்கள் தொடக்கம்

## பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு*
பலகோடி நூறாயிரம் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!*
உன் சேவடி செவ்வி திருக்காப்பு. 1

## அடியோமோடும் நின்னோடும்* பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு*
வடிவாய் நின் வலமார்பினில்* வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*
வடிவார் சோதி வலத்துறையும்* சுடராழியும் பல்லாண்டு*
படைபோர் புக்கு முழங்கும்* அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே. 2

வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்* வந்து மண்ணும் மணமும் கொண்மின்*
கூழாட்பட்டு நின்றீர்களை* எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்*
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்* இராக்கதர்வாழ்*
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப்* பல்லாண்டு கூறுதமே. 3

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து* எங்கள் குழாம் புகுந்து*
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி* வந்துஒல்லைக்கூடுமினோ*
நாடும் நகரமும் நன்கறிய* நமோ நாராயணாயவென்று*
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்!* வந்து பல்லாண்டு கூறுமினே. 4

அண்டக்குலத்துக்கு அதிபதியாகி* அசுரர் இராக்கதரை*
இண்டைக்குலத்தை எடுத்துக்களைந்த* இருடீகேசன் தனக்கு*
தொண்டக்குலத்திலுள்ளீர்!* வந்தடிதொழுது ஆயிரநாமம் சொல்லி*
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து* பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே. 5

## எந்தை தந்தை தந்தை, தந்தை தம் மூத்தப்பன்*
ஏழ்படிகால் தொடங்கி* வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்*
திருவோணத் திருவிழவில் அந்தியம்போதில் அரியுருவாகி* அரியை அழித்தவனை*
பந்தனை தீரப் பல்லாண்டு* பல்லாயிரத்தாண்டென்று பாடுதமே. 6

தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி* திகழ் திருச்சக்கரத்தின்*
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று* குடிகுடி ஆட்செய்கின்றோம்*
மாயப் பொருபடை வாணனை* ஆயிரந்தோளும் பொழிகுருதி பாய*
சுழற்றிய ஆழிவல்லானுக்குப்* பல்லாண்டு கூறுதுமே. 7

நெய்யிடை நல்லதோர் சோறும்* நியதமும் அத்தாணிச்சேவகமும்*
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு* காதுக்குக் குண்டலமும்*
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து* என்னை வெள்ளுயிராக்க வல்ல*
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப்* பல்லாண்டு கூறுவனே. 8

உடுத்துக் களைந்த நின் பீதக ஆடை உடுத்துக்* கலத்ததுண்டு*
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன* சூடும் இத்தொண்டர்களோம்*
விடுத்த திசைக்கருமம் திருத்தித்* திருவோணத் திருவிழவில்*
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப்* பல்லாண்டு கூறுதுமே. 9

எந்நாள் எம்பெருமான்* உன்தனக்கு அடியோமென்று எழுத்துப்பட்ட அந்நாளே*
அடியோங்கள் அடிக்குடில்* வீடுபெற்று உய்ந்ததுகாண்*
செந்நாள்தோற்றித்* திருமதுரையுள் சிலைகுனித்து*
ஐந்தலைய பைந்நாகத் தலைபாய்ந்தவனே* உன்னைப் பல்லாண்டு கூறுதுமே. 10

## அல்வழக்கொன்றுமில்லா* அணிகோட்டியர்கோன்*
அபிமானதுங்கன் செல்வனைப்போலத்* திருமாலே! நானும்உனக்குப் பழவடியேன்*
நல்வகையால் நமோநாராயணா என்று* நாமம் பலபரவி*
பல்வகையாலும் பவித்திரனே!* உன்னைப் பல்லாண்டு கூறுவனே. 11

## பல்லாண்டென்று பவித்திரனைப்* பரமேட்டியை*
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை* வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல்*
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்* நமோ நாராயணாயவென்று*
பல்லாண்டும் பரமாத்மனை* சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே. 12